தமிழ்நாடு தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை–600 006.

ந.க.எண். 6461 / ஜெ2 / 2024, நாள்.21.03.2024

.............................

பொருள் : பள்ளிக் கல்வி – 2023 – 2024 ஆம் கல்வி ஆண்டு – அரசு மற்றும் அரசு உதவி பெறும் நடுநிலைப் பள்ளிகளில் 6 முதல் 8ஆம் வகுப்பிற்கான பள்ளி இறுதித் தேர்வு வினாத்தாள் பதிவிறக்கம் செய்தல் – வழிகாட்டி நெறிமுறைகள் – சார்ந்து.

பார்வை : சென்னை – 6, தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநர் மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநரின் இணைச் செயல்முறைகள், ந.க.எண்.19528/ எம்/இ1/2023, நாள்.20.03.2024

..........................

2023 – 2024ஆம் கல்வி ஆண்டிற்கு அரசு மற்றும் அரசு உதவி பெறும் நடுநிலைப் பள்ளிகளில் உள்ள 6 முதல் 8ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு ஆண்டுத் தேர்விற்கான வினாத்தாட்கள் பதிவிறக்கம் செய்வது தொடர்பாகக் கீழ்க்காணும் அறிவுரைகள் வழங்கப்படுகிறது.

1. இந்த ஆண்டு பள்ளி இறுதித் தேர்வுகளுக்கான வினாத்தாள்கள் அனைத்தும் மாநில மதிப்பீட்டுப் புலம் வழியாக https://exam.tnschools.gov.in என்னும் இணையதளத்தில் முன்கூட்டியே பதிவேற்றம் செய்யப்படும்.
2. தேர்வு நடைபெறும் நாளுக்கு முந்தைய நாள் காலை 9 மணி முதல் தேர்வு நாள் மதியம் 1.00 மணி வரை அனைத்து நடுநிலைப் பள்ளிகளும் வினாத் தாள்களைப் பதிவிறக்கம் செய்ய வழிவகை செய்யப்பட்டு உள்ளது.
3. வினாத்தாட்களைப் பதிவிறக்கம் செய்யும் போது ஏற்படும் சிக்கல்களுக்குத் தீர்வு காண 14417 என்ற கட்டணமில்லாத் தொலைபேசிச் சேவையைப் பயன்படுத்த ஆசிரியர்களுக்கு அறிவுறுத்த வேண்டும்.
4. தேர்வு தொடங்கும் நாளுக்கு முன்னதாகவே, பள்ளிக் கல்வித் துறையின் சார்பில் அனைத்து அரசுப் பள்ளிகளுக்கும் வழங்கப்பட்டுள்ள அச்சுப்பொறியைப் பயன்படுத்தி மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப வினாத்தாட்களை வகுப்பாசிரியர்கள் அச்சிட்டு வைத்திருக்க வேண்டும்.

5. அனைத்து நடுநிலைப் பள்ளி ஆசிரியர்களும் இணைப்பில் உள்ள வழிமுறைகளை தெளிவாக அறிந்திருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

6. அனைத்து நடுநிலைப் பள்ளிகளுக்கும் வினாத்தாட்கள் பதிவிறக்கம் செய்து பள்ளியில் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள பிரிண்டர்களின் மூலம் பிரதி எடுத்துக் கொள்வதற்குத் தேவையான Paper & Tonnerக்கு ஆகும் செலவினத் தொகை ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி நிதியில் இருந்து வழங்கும் வகையில், மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு (தொடக்கக் கல்வி) வழங்கப்பட்டு உள்ளது. அனைத்து தலைமையிட மாவட்டக் கல்வி அலுவலர்களும் கால தாமதமின்றி இத்தொகையினை நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்களின் வங்கி கணக்கிற்கு மின்னணு பரிமாற்றம் (NEFT / RTGS) மூலம் விடுவித்திட வேண்டும். (SNA வங்கிக் கணக்குத் தவிர்த்து)

மேற்குறிப்பிட்டுள்ள அறிவுரைகளைப் பின்பற்றி அனைத்து அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளிலும் ஆண்டுத் தேர்வுகளை சிறப்பாக நடத்திட அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்களும் (தொடக்கக் கல்வி) அறிவுறுத்தப்படுகிறார்கள்.

இணைப்பு : வழிகாட்டு நெறிமுறைகள்

21/3/2024

தொடக்கக் கல்வி இயக்குநர்

பெறுநர்

மாவட்டக் கல்வி அலுவலர்கள் (தொடக்கக் கல்வி),


அனைத்து மாவட்டம்.

# இணைப்பு – 1


## வழிகாட்டு நெறிமுறைகள் – வினாத்தாள் பதிவிறக்கம்

1. வினாத்தாள்களைப் பதிவிறக்கம் செய்வதற்கு https://exam.tnschools.gov.in (✓) என்னும் இணைய முகவரியை அணுக வேண்டும். கடந்த காலங்களில் பயன்படுத்தப்பட்ட https://exams.tnschools.gov.in (✗) என்னும் EMIS முகவரியைப் பயன்படுத்தக் கூடாது.


2. இந்த இணையதளத்தில் அனைத்து வகை அரசுப் பள்ளிகளும்/அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளும் தலைமையாசிரியரின் EMIS id–ன் வழியாக வினாத்தாள்களைப் பதிவிறக்கம் செய்வது பரிந்துரைக்கப்படுகிறது. தலைமையாசிரியரின் EMIS id–யைப் பயன்படுத்த இயலாத பள்ளிகள் வகுப்பாசிரியரின் EMIS id–யைப் பயன்படுத்தலாம். வகுப்பாசிரியரின் EMIS id–யும் பயன்படுத்த முடியாத பள்ளிகள் U–DISE எண்ணையும் அதன் கடவுச் சொல்லையும் பயன்படுத்தலாம்.





3. உள்நுழைந்தவுடன் காணப்படும் Descriptive பகுதியைக் கிளிக் செய்ய வேண்டும்.




4. அங்குள்ள Download Question Paper பகுதியில் தேர்வு நாளையும் வகுப்பையும் குறிப்பிட்டு தேர்வு நாளுக்கு முந்தைய நாள் காலை 9 மணி முதல் தேர்வு நாள் மதியம் 1 மணி வரை வினாத்தாள்களைப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.




5. தேர்வு முடிந்த பின்பு Feedback பகுதியை கிளிக் செய்து ஒவ்வொரு நாளும் பின்னூட்டங்களைப் பதிவு செய்ய வேண்டும். அரசுப் பள்ளிகள்/அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளும் பின்னூட்டம் வழங்குவதற்கு பள்ளியின் தலைமையாசிரியர் / ஆசிரியரின் EMIS/பள்ளியின் UDISE பதிவெண் ஆகியவற்றுள் ஒன்றைப் பயன்படுத்திக் கொள்ளலாம். (**குறிப்பு**: பின்னூட்டத்தைப் பதிவு செய்தால் மட்டுமே அடுத்தத் தேர்வுக்கான வினாத்தாளைக் குறித்த காலத்தில் பதிவிறக்கம் செய்ய முடியும்)






6. பதிவிறக்கம் செய்த PDF வினாத்தாள்களில் பள்ளியின் UDISE எண் இடம்பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

7. சமூக அறிவியல் பாடத்துக்கான வரைபடம் பதிவிறக்க வேண்டிய வினாத்தாளுடன் இணைக்கப் பெற்றிருக்கும். அவற்றை அச்சடித்துப் பயன்படுத்திக் கொள்ளலாம். கணிதப் பாடத்துக்குத் தேவைப்படும் வரைதாள்களை (Graph sheet) பள்ளிகளே மாணவர்களுக்கு வழங்கலாம்.

8. வினாத்தாள்களைப் பதிவிறக்கம் செய்வதில் ஏதேனும் சிக்கல்கள் நேர்ந்தால் உடனடியாக 14417 எண்ணில் தொடர்பு கொண்டு பதிவு செய்ய வேண்டும். மேலும் தொடர்புடைய மாவட்டக் கல்வி அலுவலகத்துக்குத் தகவல் தெரிவிக்க வேண்டும். எக்காரணம் கொண்டு தொடர்பில்லாத வேறொரு பள்ளியின் கணக்கில் இருந்து பதிவிறக்கம் செய்யப்பட்ட வினாத்தாளைப் பயன்படுத்தக் கூடாது.

9. வினாத்தாள்களை அச்சிடுவதில் ஏதேனும் சிக்கல்கள் ஏற்பட்டால் தொடர்புடைய மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களையும் (District Coordinators – Samagra Shiksha) வட்டார வள மைய ஆசிரியப் பயிற்றுநர்களையும் தொடர்பு கொண்டு ஆலோசனைகளைப் பெற வேண்டும்.

10. தேர்வுகளை நடத்துவதில் ஏதேனும் சிக்கல்கள் நேர்ந்தால் தொடர்புடைய பள்ளித் தலைமை ஆசிரியர்கள் / ஆசிரியர்கள் சார்ந்த மாவட்டக் கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி) அலுவலகத்திற்குத் தகவல் தெரிவித்து ஆலோசனைகளைப் பெற வேண்டும்.